**288—**

## வீட்டுமனைப் பட்டா

***53768—திருமதி க. அழகுவேலு:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட கள்ளக்குறிச்சி வட்டம், தியாகதுருகம் பேரூராட்சிக்குட்பட்ட பெரியமாம்பட்டு கிராம எல்லை, புல எண் 59/4-ல் 1.67.5 ஹெக்டேர் தீர்வை ஏற்படாத தரிசு, பாறைப் புறம்போக்கில் 26 நபர்கள், நரிக்குறவர்கள், ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப்பட்டோர் ஆக்கிரமிப்பு செய்து, வீடுகள் கட்டி அனுபவித்து வருகின்றனர். மேற்படி இடம் தீர்வை ஏற்படாத தரிசாகவுள்ளதால், கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்யப்பட்டு, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

**திருமதி க. அழகுவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களின் கஷ்டங்களைப் போக்க, இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, கடந்த 4½ ஆண்டுகளில் 10,10,416 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி, சரித்திர சாதனைப் படைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களின் வீட்டில் விளக்கேற்றி வைத்த வாழும் மனித தெய்வம், தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

2015 செப்டம்பர் 18]

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சியில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கச் செய்த மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் உள்ள மலைக்கொத்தலம் கிராமத்தில், சுமார் 35 ஆண்டுக் காலமாக 26 ஆதி திராவிட குடும்பங்கள் பாட்டை புறம்போக்கு இடத்தில் வசித்து வருகின்றன. அதை நத்தமாக மாற்றி, அந்த 26 குடும்பங்களுக்கும் பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சேபகரம் இல்லாத நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அதை வரன்முறைப்படுத்தி பட்டா கொடுப்பதற்கு வருவாய் நிலை ஆணை எண் 21-ன் கீழும், நிலை ஆணை எண் 26-ன் கீழும் விதிமுறைகளில் வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், ஆட்சேபகரமான புறம்போக்கில் இருப்பவர்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்து, அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கும் அல்லது வகைப்பாடு மாற்றி அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கும் வாய்ப்பிருக்கின்றது. அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இடத்தில் வகைப்பாடு மாற்றம் செய்து வழங்குவதற்கு வாய்ப்பு இருக்குமேயானால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு உரிய பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த நான்காண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 7 இலட்சம் என்பதையும் கடந்து, 8,52,000 வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி, சரித்திர சாதனை படைத்திருக்கின்ற ஓரே அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி)

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொருவருக்கும் வீட்டுமனைகள் சொந்தமாக இருக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நிலையான கொள்கை. அந்த அடிப்படையில், எந்தெந்த வகைகளில் எல்லாம் நலிவுற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க முடியுமோ, அந்தந்த வகைகளில் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

**திருமதி க. அழகுவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சிக்குட்பட்ட சிலாவட்டம் பகுதியில் அதிகமாக வசிக்கும் நரிக்குறவ மக்களுக்குப் பட்டா வழங்கப்படுமா என்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சேபணை இல்லாத இடங்களிலே ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்களுக்கு வருவாய் நிலை ஆணை எண் 21-ன் கீழே வரையறைக்குட்பட்டு வீட்டுமனை ஒப்படை வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களைப் பொறுத்தளவிலே, அவர்களுடைய ஆண்டு வருமானம் ரூ.30,000/- அல்லது அதற்குக்*

2015 செப்டம்பர் 18]

கீழே இருக்க வேண்டும்; நகர்ப்பகுதியைப் பொறுத்தளவிலே, அவர்களுடைய ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குள் இருக்க வேண்டும் என்று உச்சவரம்பு வரையறுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு வசிப்பவர்கள் நரிக்குறவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வருமான உச்சவரம்பைப் பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் எழவில்லை. அந்த இடம் ஆட்சேபகரமற்ற இடமாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஆட்சேபகரமான புறம்போக்காக இருந்தால், பட்டா வழங்க இயலாது. ஆட்சேபணையற்ற புறம்போக்காக இருந்தால், நிச்சயமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நரிக்குறவர்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித ஆட்சியிலேதான் ஒவ்வொரு மாதமும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, நரிக்குறவர்களும் 'எங்களுக்கும் இந்த பூமியிலே சொந்தமாக இடம் இருக்கிறது' என்று பெருமைகொள்கிற வகையிலே, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி சரித்திர சாதனை படைத்திருக்கிற ஒரே அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகுதியிருப்பின் நிச்சயமாகப் பட்டா வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஒன்றியம், சுடுகாட்டுப் பாதை வழியில் 45 நரிக்குறவ குடும்பங்கள் நீண்டகாலமாக வசித்து வருகின்றன. அந்த இடம் சுடுகாட்டுப் பாதை என்ற காரணத்தினாலும், ஆதி திராவிட சமுதாய மக்களுக்குச் சொந்தமான இடம் என்ற காரணத்தினாலும், அந்தப் பகுதிவாழ் மக்கள் ஆட்சேபிக்கின்றனர்.

இதனால், அரசினுடைய திட்டங்கள் எதையும் பெற முடியாமல் அந்த நரிக்குறவ மக்கள் எல்லாம் நீண்டகாலமாகக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதிவாழ் நரிக்குறவ மக்களுக்குப் பட்டா கிடைக்க உரிய மாற்று இடம் கொடுத்து, அரசினுடைய அனைத்துத் திட்டங்களும் கிடைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிருவாகத்தின் மூலமாக மாற்று இடத்தை ஆய்வு செய்து, தேர்வு செய்து, அந்த இடங்களிலே அவர்களைக் குடியமர்த்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் பல நிகழ்வுகளிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு செய்து, அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இந்த நிகழ்விலும், குறிப்பிட்ட அந்த இடம் ஆட்சேபகரமான இடமாக இருந்தால், அவர்களுக்குத் தேவையான மாற்று இடத்தை ஏற்பாடு செய்து, அவர்கள் குடியிருக்க வீட்டுமனை வழங்கப்படும்.

வீட்டுமனைப் பட்டா இல்லாத காரணத்தினால், அவர்களுக்கு அரசு நலத் திட்ட உதவிகள் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். நிச்சயமாக அப்படி ஒரு நிலையெல்லாம் இல்லை. வீட்டுமனைப் பட்டாவிற்கும் அரசின் நலத் திட்ட உதவிகளைப் பெறுவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அவர்கள் குடியிருக்கிற இடங்களிலே குடும்ப அட்டைகள் மற்றும் வாக்காளர் அடையாள அட்டை இருக்கின்ற பட்சத்திலே, அரசின் நலத் திட்ட உதவிகள் அனைத்தையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, கருணை உள்ளத்தோடு வழங்கி வருகிறது என்பதையும், வீட்டுமனைப் பட்டா இல்லை என்ற காரணத்திற்காக எந்த ஒரு நபருக்கும் அரசின் நலத் திட்ட

2015 செப்டம்பர் 18]

உதவிகள் மறுக்கப்படுவதில்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன் அவர்கள்.

முற்பகல் 10-20

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்குகிறேன். எனது பூந்தமல்லி தொகுதி, பாக்கம் ஊராட்சி, பினோபாஜி நகரில் சுமார் 50 ஆண்டுகளாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் உபரி நிலமாக அறிவிக்கப்பட்ட இடங்களில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழே, வரையறைக்குட்பட்டு எந்தவிதமான நிலமாக இருந்தாலும் அதற்குப் பட்டா வழங்குகிறோம். அது ஆட்சேபகரமான புறம்போக்காக இருக்கக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே மிகை நிலமாக அரசு கையக இருப்பிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். மிகை நிலம், வீட்டுமனை வழங்குவதற்கும், அரசினுடைய பொதுப் பயன்பாட்டிற்கும்தான் பயன்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையிலே ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடிசையெல்லாம் வீடாகும் நேரத்திலே நாங்க தெருவோரம் குடியேறத் தேவையில்லே" என்ற பாடல் வரிகளுக்கேற்ப, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் பசுமை வீடுகள் எல்லோருக்கும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. என்னுடைய திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டி. கல்லுப்பட்டி, பேரையூர் பகுதிகளில் பேருந்து நிலையங்களிலும், திருப்பரங்குன்றம் இரயில்வே ஜங்ஷன் பகுதியிலும் நீண்டகாலமாகக் குடியிருந்து வருகிற நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். திருப்பரங்குன்றம் மலைக்குப் பின்னால் ஊர் ஊராகச் சென்று குறி சொல்லி வரக்கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட காட்டு நாயக்கர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. எனக்குத் தெரிந்து கிட்டத்தட்ட 2 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு வசிக்கும் அவர்கள் இதுவரையிலும் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, திருப்பரங்குன்றம் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காட்டு நாயக்கர் சமுதாய மக்களுக்கும், டி. கல்லுப்பட்டி, பேரையூர், திருப்பரங்குன்றம் பகுதிகளிலுள்ள நரிக்குறவ மக்களுக்கும் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக இருப்பது வசிப்பதற்கு ஓர் இடம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிலையான கொள்கையை வகுத்து, முன்னுரிமை அடிப்படையிலே அதை வழங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திருமங்கலம் பேருந்து நிலையம் மற்றும் பிற இடங்களிலே வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க உரிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிய இடம் தேர்வு செய்து வழங்கப்படும். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட, நீண்ட நெடிய காலமாகக்

2015 செப்டம்பர் 18]

குடியிருந்துவந்த ஏறத்தாழ 350-க்கும் மேற்பட்ட நரிக்குறவர் குடும்பங்களுக்கு இதுவரையில் வரலாற்றில் இல்லாதவகையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய ஏற்பாட்டிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, ஒரே இடத்திலே வைத்து வீட்டுமனைப் பட்டாக்கள் ஒரு மாதத்திற்கு முன்பாக வழங்கப்பட்டு, அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய தலைமையிலேதான் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. நலிவுற்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே வீட்டுமனை வழங்குவதை நிலையான கொள்கையாகக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன 3 இடங்களிலே, காட்டு நாயக்கர் மற்றும் நரிக்குறவர்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 289, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**289—**

**பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்**

***32017—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

*மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பத்மநாபபுரம் தொகுதி, திருவரம்பு, பொன்மனை ஆகிய பகுதிகளிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*